வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06 31.03.2025 திங்கட்கிழமை இதழ் : 92 பக்கங்கள் : 12




# முரணான செயல்பாடுகளில் படை தரப்பினரும் ஈடுபட்டனர்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பிமல் தெரிவிப்பு

- மாகாண சபை குறித்து இந்தியா கூறவேண்டியதில்லை!
- உறுதியளித்தபடி மாகாண சபைகள் தேர்தல் நடக்கும்



யாழ்ப்பாணம், மார்ச் 31

**உள்நாட்டில் போர் நடந்தபோது, படைத் தரப்பாலும் விடுதலை புலிகளாலும் புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட அமைப்புகளாலும் பல்வேறு முரணான செயல்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின்போது அவ்வாறு (மனித உரிமைகள், விதிகள் மீறல்) இடம்பெறும் - இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.**

"மாகாண சபை முறைமை குறித்து இந்தியா எமக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. எனினும், நாம் உறுதியளித்தபடி மாகாண சபை தேர்தலை நடத்துவோம்" என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை நேற்று தனியார் விடுதி ஒன்றில் அவர் சந்தித்தார். இதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டில் போர் நடந்த போது, படைத் தரப்பாலும் விடுதலை புலிகளாலும் புலிகளுக்கு எதராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட பல அமைப்புகளாலும் பல்வேறு முரணான 11




# தென்பட்டது தலைப்பிறை இன்று ரமழான் பெருநாள்

கொழும்பு, மார்ச் 31

நேற்றைய தினம் தலைப்பிறை தென்பட்டதால் ரமழான் பெருநாள் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

இஸ்லாமியர்களின் நோன்பு மாதமான ரமழான் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமானது. இந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை நாட்டில் தலைப்பிறை தென்பட்டது. இதைத் தொடர்ந்து இன்றைய தினம் ரமழான் பெருநாள் கொண்டாடப்படுகிறது.

முஹமது நபிக்கு முதன் முதலில் திரு குர்ஆனை வெளிப்படுத்திய மாதத்தை நினைவுகூரும் விதமாக உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்கள் நோன்பிருந்து ரமழான் பெருநாளை கொண்டாடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கும் திருச்சி விமான நிலையத்துக்கும் இடையிலான விமான சேவை 47 ஆண்டுகளின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

திருச்சியில் இருந்து நேற்று மதியம் புறப்பட்ட விமானம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது பெரும் வரவேற்பு அளிக்கப்பட் டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதரகர் சாய் முரளி உள்ளிட்ட துணைத்தூதராக அதிகாரிகள், 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னதாக சூத்திரதாரிகளை அம்பலமாக்குவோம்!

## ஜனாதிபதி அநுர அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 31

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் அம்பலப்படுத்தப்படுவார்கள் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாத்தறை - தெய்யேந்திர பிரதேசத்தில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 11

# மிகக்குறைந்த மின் கட்டண நாடாக இலங்கை மாறும்!

## ஜனாதிபதி அநுர சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 31

எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குள் பிராந்தியத்தில் மிகக்குறைந்த மின்சார கட்டணம் கொண்ட நாடாக இலங்கை மாறும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மீதெனியவில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பல கட்சிகளாக பிரிந்து போட்டியிடுகின்றனர். வெற்றிபெற்ற பின்னர் இணைந்து ஆட்சியமைக்கின்றனர். அவ்வாறெனில், எதற்காக 11

# முத்திரை வரி 100 சதவீதம் அதிகரிக்கிறது

கொழும்பு, மார்ச் 29

சொத்து ஒன்றை குத்தகை அல்லது வாடகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்த ஆவண பத்திரத்துக்கான முத்திரை வரி 100 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை (ஏப்ரல் 01) செவ்வாய்க்கிழமை முதல் இந்தக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு 11

# பிரித்தானியாவின் நிலைப்பாடு ஐ. சி. சி. வரை செல்லவேண்டும்!

## இதன்மூலமே நீதி கிட்டும் என்கிறார் செல்வம்



வவனியா, மார்ச் 31

முன்னாள் படைத் தளபதிகள் உட்பட 4 பேருக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பான பிரிட்டனின் நிலைப்பாடு சர்வதேச நீதிமன்றம் (ஐ. சி. சி) வரை செல்லவேண்டும். இதன்மூலம் நீதி கிடைக்க வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியா - வைரவபுளியங்குளத்தில் அவரின் பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றஜ லுணு என்று பெயரிடப்படுமளவுக்கு ஆனையிறவு உப்புச்சப்பற்ற பெயரல்ல!

## ஐங்கரநேசன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கையில் உப்பளங்களை நிர்வகித்து வருகின்ற தேசிய உப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆனையிறவில் விளையும் உப்புக்கு றஜ லுணு எனப் பெயரிட்டுள்ளது. இதுகாலவரையில் ஆனையிறவு உப்பு என விளிக்கப்பட்டு வந்த உப்பு றஜ லுணு எனப் பெயரிடப்படும் அளவுக்கு, ஆனையிறவு ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல. அது தமிழ் மக்களின் வரலாற்றில், வாழ்வியலில், பொருளியலில், போரியலில் பின்னிப்பிணைந்து அவர்தம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்துவிட்ட பெயர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்புக்கு 'றஜலுணு' என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டிருப்பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், யானைகள் தாவர உண்ணிகள் என்பதால் அவற்றின் உடலில் உப்புச்சத்து பற்றாக்குறை ஏற்படும்போது அவை உப்பைத் தேடிச்சென்று உண்பது வழமை. ஆனையிறவு என்ற பெயர் நிலவுவதற்கு, வன்னி காட்டுயானைகள் உப்பைத் தேடிவந்த கடவை இது என்பதோடு, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வன்னி யானைகள் ஏற்றுமதியின் பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பாதையாக இது அமைந்தமையுமே காரணமாகும்.

ஆனையிறவு கடல் நீரேரிகளின் கரைகளில் உப்பு விளைவதை அவதானித்த ஆங்கிலேயர்கள் 1938இல் ஆனையிறவு உப்பளத்தை அமைத்தனர். இங்கு விளையும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு 1954இல் பரந்தன் இரசாயன தொழிற்சாலை உருவானது. உப்பளமும், இரசாயன தொழிற்சாலையும் யுத்தம் உச்சம் பெறும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தன.

ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக 1760இல் போர்த்துக்கேயர்கள் தங்களது இராணுவத் தளமாக இங்கு கோட்டையொன்றை உருவாக்கினர். பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று இலங்கையை ஆண்ட அந்நியர்களிடம் கைமாறிய இக்கோட்டை சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வசமாகியது. 1952இல் இக் கோட்டை நவீனவசதிகளுடன் கூடிய இராணுவத் தளமாக வடிவமைக்கப்பட்டது.

ஆனையிறவு பாதையால் பயணிப்பது என்பது மரணத்தின் குகையினூடாக செல்வதற்கு ஒப்பானது என்று தமிழ் மக்கள் நடுங்கும் அளவுக்கு பின்னாளில் இங்கு அமைந்திருந்த சோதனைச் சாவடிகள் திகிலூட்டுவனவாக அமைந்திருந்தன. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் இங்கு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதும், பின்னர் இக் கோட்டை விடுதலைப் புலிகள் வசமாகி நிர்மூலமாக்கப்பட்டதும் வரலாறு.

ஆனையிறவு இவ்வளவு முக்கியத்துவங்களோடு இடவமைவு காரணமாக இங்கு விளையும் உப்புக்கு முதல்தரமான உப்பு என்ற பெருமையையும் தேடிக் கொடுத்தது. ஆனால், இவற்றையெல்லாம் புறந்தள்ளி மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாக றஜ லுணு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உப்பில்லா பண்டம் மட்டுமல்ல, அது றஜ லுணு உப்பாக இருந்தால் தமிழ் மக்களின் மனோவுணர்வில் அதுவும் குப்பையில்தான் - என்றுள்ளது.(ஐ)

# சுற்றுலா முதலீடு குறித்து யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுற்றுலா முதலீடு தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் கடந்த 27 ஆம் திகதி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இந்திய முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆன்மீகம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும், மத்திய மாகாண அனுமதிகள் பெறுவதற்கான பொறிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பருத்தித்துறை, மருதங்கேணி நெடுந்தீவு பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர், இந்திய முதலீட்டாளர் குழுவினர் உட்பட சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# மரிய சேவியர் அடிகளார் நினைவு பேருரை நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 31

திருமறை கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர் அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாரின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தில் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருமறை கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நினைவுப் பேருரையை "அழகியல் : ஓர் ஆன்மீக நோக்கு நிலை" என்னும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியரும் நுண்கலைத்துறை முன்னாள் தலைவருமான கலாநிதி திருமதி ஏ. என். கிருஷ்ணவேணி ஆற்றவுள்ளார். (ஐ)

# பொலிஸ் அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்தவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 31

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் லண்டன் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்ப பிணக்கு தொடர்பான வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்கவுக்கு நேற்று முன்தினம் 50 ஆயிரம் ரூபாயை லஞ்சமாக வழங்க முயன்றபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# பூங்காவில் விளையாடிய சிறுமியின் சங்கிலி அறுப்பு

வவுனியா, மார்ச் 31

பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஒருவரின் சங்கிலியை இரு பெண்கள் அறுத்துச் சென்றுள்ளனர் என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபைக்கு சொந்தமான பூங்காவிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூங்காவில் தனியாக விளையாடிக் கொண்டிருந்தார். அந்த சிறுமியிடம் கதை கொடுத்து சிறுமியின் சங்கிலியை இரு பெண்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ -10)

# கஞ்சா கலந்த மாவாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் 9 கிலோ 300 கிராம் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தமிழகத்திலிருந்து வந்த மீனவர் பிரதிநிதியை கைது செய்ய முயற்சி!

## சந்தேகநபர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மீனவர் சங்கங்களுடனான பேச்சுக்காக இந்தியாவிலிருந்து வருகை தந்த மீனவ சங்க பிரதிநிதி ஒருவரை கைது செய்ய முற்பட்டமையால் அவர் உடனடியாக நாட்டை விட்டு சென்றுள்ளார் என்று அறிய வருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவிலிருந்து இலங்கை மீனவர்களுடன் பேச்சு நடத்த இந்திய மீனவ பிரதிநிதிகள் ஐவர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். இவ்வாறு வந்தவர்களில் ஒருவர் கடந்த மாதம் மன்னார் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் பயணித்த படகு ஒன்றின் உரிமையாளராவார்.

இது தொடர்பான வழக்கில் ஜேசுராசா என்பவர் முதலாம் எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த நபர், நாட்டுக்கு வருகை தந்தமையை அறிந்த மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் இந்த விடயத்தை தமது தலைமைப் பணிமனை ஊடாக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அறிவித்தது.

இதையடுத்து அவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீரியல் வளத் திணைக்களத்துக்கு சட்ட மா அதிபர் திணைக்களம் எழுத்தில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவு உரிய திணைக்களம் ஊடாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குச் செல்வதற்கு முன்பு குறித்த மீனவர் பிரதிநிதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று அறிய வருகிறது.

# யாழில் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் விற்பனையும் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய பதில் அரசாங்க அதிபர், "சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் தின நிகழ்வுடன் நின்று விடாது மாவட்ட செயலக பெண்கள் பிரிவினால் மாவட்டச் செயலக பெண் உத்தியோகத்தர்களுக்கான யோகாசன வகுப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி நடைபெற்றதன் தொடர்ச்சியாக பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனையும் கண்காட்சியும் நடைபெற்றது. பாலம் நிறுவனத்தின் அனுசரணையில் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 15 பெண் முயற்சியாளருக்கான வாழ்வாதாரத் திட்டத்துக்காக மொத்தமாக 15 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளதும் சிறப்பான விடயம். மேலும், இன்றைய காலகட்டத்தில் அரசாங்க சேவைகளில் அதாவது நிர்வாக மட்டத்தில் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் பெண்கள் அதிகளவில் உள்ளனர். இதன் மூலம், சமுதாய வளர்ச்சிக்கு பெண்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். பெண்கள் சர்வதேச ரீதியாகவும் மேம்பட்ட நிலைமையே காணப்படுகிறது. மேலும், பெண்களின் வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும், தற்போது பிள்ளை வளர்ப்பில் குறிப்பாக பிள்ளைகளின் கல்வியின் முன்னேற்றத்தில் தயார்மார்களின் அக்கறை மற்றும் பங்களிப்பு அதிகமாக காணப்படுகிறது. எமது மாவட்டத்தின் பெண்கள் அபிவிருத்தியில் அனைவரும் ஒன்றிணைந்து செயல் படவேண்டும்"- என்றார்.

பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத் திட்டத்துக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், 40 இற்கும் மேற்பட்ட பெண் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டு விற்பனையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், காரைநகர் பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உதவிப் பிரதேச செயலாளர்கள், பாலம் நிறுவனத்தின் முகாமையாளர், வேல்ட் விஷன் திட்ட முகாமையாளர், மாவட்ட பிரதி புள்ளிவிவர பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
31.03.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 17

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# உப்புக்கு பெயரிடல்

ஆனையிறவு பகுதியில் உற்பத்தியாகும் உப்புக்கு 'ரஜ லுணு' என்று பெயர் வைத்தமை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் வழமைபோல் தங்களின் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனால், இவ்வாறு கருத்துகளை வெளியிடுவோர் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்வதில்லை. சில விடயங்கள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளால் பாராளுமன்றத்தில் பேச முடியும். அத்துடன், அறிக்கைகளை வெளியிட லாம் அதற்கப்பால் எதனையும் செய்ய முடியாது. அதிலும், பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன பேசுகின்றனர் என்பது அவர்க ளுக்கே சரியாகப் புரிவதில்லை.

ஆனையிறவு உப்பு விவகாரத்தை எவ்வாறு புரிந்து கொள்வது? உண் மையில் இதனை பலரால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அத்துடன், அதற்கு அவர்கள் முயற்சிப்பதுமில்லை. சிலரால் புரிந்து கொள்ள முடியும் ஆனால், அவர்களோ புரிந்தும் புரியாதவர்கள்போல் நடிக்கின்றனர். ஒரு கூற்றுண்டு. அதாவது, நித்திரை கொள்பவர்களை எழுப்பலாம் ஆனால் நித்திரை கொள்வது போன்று நடிப்பவர்களை எவ்வாறு தட்டியெழுப்ப முடியும்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் ஆதரவு உள்ள டங்கலாக அரிதான பெரும்பான்மை பாராளுமன்ற பலத்தைக் கொண்டி ருக்கிறது. இந்தக் காலத்தில் அவர்கள் எவ்வாறு நாட்டை வழிநடத்த விரும்புகிறார்களோ அவ்வாறு கொண்டு செல்வதற்கான அதிகாரமும் ஆணையும் அவர்களுக்கு உண்டு. ஒருவேளை நடந்து முடிந்த பாராளு மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களை பெரும்பான்மையாக ஆத ரிக்காமல் இருந்திருந்தால் ஓரளவுக்கு சில விடயங்களில் தமிழ் அரசியல் வாதிகளின் குரலுக்கு அரசியல் ரீதியான முக்கியத்துவம் இருந்திருக்கலாம் - தற்போது அதுவும் இல்லை.

ஆனையிறவு உப்புக்கு 'ஆனையிறவு' என்னும் அடைமொழி அவசி யம் என்று கூறுபவர்களிடம் அதற்கான நியாயம் இருக்கலாம். அது பெருமளவுக்கு தமிழ் அடையாளம் சார்ந்த ஓர் அவாவிலிருந்தே வரு கின்றது. ஆனால், அரசாங்கமோ சந்தையடிப்படையில் விடயத்தை பார்க்கிறது. உலகில் பொருளாதார விடயங்களில் சந்தைதான் முக்கியமே தவிர, உள்ளூர் உணர்வுகள் அல்ல. உள்ளூர் உணர்வுகளை சந்தைப் படுத்த முடியாது.

இதற்கப்பால் தமிழ் அரசியல் தரப்புகள் விடயங்களை தீர்மானிக்க வேண்டுமாயின், அதற்கு அரசியல் அதிகாரம் தேவை. வடக்கு மாகாண சபை தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருந்திருக்குமானால் வடக்கை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளில் அரசியல் ரீதியில் தலையீடு செய்வதற் கான வாய்ப்பு தமிழர்களிடம் இருந்திருக்கும். ஆனால், தற்போது அந்த வாய்ப்பும் இல்லை.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தமிழர் தரப்புகள் எந்த அடிப்படையில் தலையீடு செய்ய முடியும்? ஆகக்குறைந்தது உள்ளு ராட்சித் தேர்தலிலாவது தமிழ் மக்களை தங்களுடன் வைத்துக்கொள்வதில் தமிழ் கட்சிகள் வெற்றிபெற முயற்சிக்க வேண்டும். அதில் வெற்றி பெற்றால், இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேசுகின்றபோது ஆகக் குறைந்தளவாவது அரசியல் நியாயப்பாடு இருக்கலாம்.


'ஈழநாடு' தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கிறது. அரசியல் நிலைமைகளை துல்லியமாக மதிப்பிட்டமை மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பில் உன்னிப்பான அவதானத்தின் அடிப்படையிலுமே இந்த விடயங்களை நாம் வலியுறுத்தியிருந்தோம். அதாவது, முதலில் இருப்பதை உச்சபட்சமாக - திறமையுடன் கையாள வேண்டும். வெறும் சுலோகங்களை முன்வைத்து அரசியலை நகர்த்த முடியாது. இதன் காரணமாகவே மாகாண சபையின் முக்கியத்துவம் தொடர்பில் நாம் வலியுறுத்தி வந்தோம். எமது தீர்க்கதரிசனம்மிக்க பார்வை சரியென்ப தையே காலம் நிரூபித்திருக்கிறது.

# விசரன் போன்று நடித்து உலகை உய்வித்த செல்லப்பா சுவாமிகள்...!

பண்டிதர் சி. பொன்னம்பலவாணர்

**நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 115ஆவது குருபூசை தினம் இன்றாகும். இதையொட்டி, இந்தக் கட்டுரை வெளியாகிறது.**

உலகறிய மெய்ஞானியாக தூய சித்தராக விளங்கியவர் யோக சுவாமிகளாவார். யோக சுவாமிகளின் குருவாக விளங்கியமை மட்டுமன்றி யோக சுவாமிகள் வாயிலாக இந்த உலகுக்கு தெய்வீகத்தை அருளிய ஞான சித்த ராக விளங்குபவர் நல்லூர் தேரடிச் சித்தர் என் னும் செல்லப்பா சுவாமிகளாவார். வட்டுக் கோட்டை வல்லிபுரம் என்பவருக்கும் நல்லூர் பொன்னம்மா என்பவருக்கும் பிள்ளைகளாக பிறந்த நால்வருள் ஒருவரே செல்லப்பா சுவாமி களாவார். இவர் 1860ஆம் ஆண்டு பிறந்தார் என்பர்.



செல்லப்பா சுவாமிகள் இளமையிலேயே தெய்வீக நாட்டம் கொண்டு குடும்பப் பற்றை விட்டு தம் வீட்டுக்கு மிக அண்மையில் இருந்த நல்லூர் கந்தசுவாமியாரை வழிபட்டுக் கொண்டு தேரடியிலேயே இருந்திருக்கிறார். குடும்பப் பற்றையும் உலகப் பற்றையும் விட்டு ஆன்மீக சாதனையில் ஈடுபடுவோர் முன்னே றுவர். வீட்டையும் ஊரையும் துறந்து காடுக ளையோ புண்ணியத் தலங்களையோ அடை வதே பெரும்பான்மையான வரலாறு. ஆனால், செல்லப்பா சுவாமிகளோ வீட்டில் அயலில் ஊரிலுள்ள ஆலயத்தையும் தேரடி யையுமே தன் சாதனைகளை மேற்கொண்டு முன்னேறி பூரணத்துவ நிலையை அடைந்தி ருக்கிறார். இப்படியான தன் முயற்சிக்குப் பாதுகாப்பாகவே விசரன் போல நடித்திருக் கிறார்.உலகம் உறங்கும் போது ஞானி விழித் திருப்பான் என்ற கோட்பாட்டுக்கு அமைய நடுச்சாம வேளையில் நல்லைக் கந்தன் ஆலய முன்னே நின்று முருகனை அழைத்து வணங்கி அருள் பெற்றிருக்கிறார். தன் உறவினர் இரக் கத்துடனும் அன்புடனும் உணவு கொடுக்க முயன்றால் “உதில் நஞ்சு போட்டுக் கொண்டு வந்துள்ளாய்” என்று அதை ஏற்காமலோ அல்லது ஏற்று வீசி எறிந்தோ விசரன் போல நடித்திருக்கிறார். உறவு முறையான பாசத்தன் மையையே அவர் நஞ்சு எனக் குறிப்பிட்டு வீட்டுத் தொடர்பைத் துறந்த மகிமையை நாம் புரிந்த கொள்ள வேண்டும்.

செல்லப்பா சுவாமிகளின் வரலாற்றை எழுதுவோர் பலர் செல்லப்பா சுவாமிகளின் குரு கடையிற் சுவாமிகள் என்று குறிப்பிடு கின்றனர். இக்கருத்தைச் செல்லப்பா சுவாமி களைப் பற்றி மிக மிக விரிவாகவே துதித்தி ருக்கின்ற யோக சுவாமிகள் ஓரிடத்தில் தானும் கூறக் குறிப்பிடவில்லை.

யோக சுவாமிகளின் சீடர்களின் மிக்க முதன்மை உடையவர் என எல்லோராலும் அறியப்பெற்றிருக்கும் செல்லத்துரை சுவாமி கள் பல சந்தர்ப்பங்களில் செல்லப்பா சுவாமி கள் நல்லூர்க் கந்தன் அருள் பெற்றவர் என்றும் அக்காலத்தில் கடையிற் சுவாமிகளை ஓரிரு முறை சந்தித்திருக்கின்றார் என்றும் குறிப்பிட் டிருக்கிறார். அருளாளர் இருவர் சந்தித்த சந்திப்பே செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகள் வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. இன்றும் செல்லத்துரை சுவாமிகள் கடையிற் சுவாமிகள், குழந்தைவேற்சுவாமிகள் சமாதி போல் செல்லப்பா சுவாமிகள் யோக சுவாமி கள் சமாதி அமையாமை பற்றி யும் வேறு பாட்டை சுட்டியிருக் கிறார்.

செல்லப்பா சுவாமிகள் தன் சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள் பற்றியழைத்துப் தண் ணீர் பருகாமல் அற்புதமாக விசர் செல்லப்பன் எனப் பகிரங்கமா னாலும் அவனின் புனிதமும் தெய்வீகமும் வெளிப்படச் செய்தது. அதனால் கொழும் புத்துறை திருஞானசம்பந்தர் இராம லிங்கம் - துரையப்பா - தம்பித்துரை முருகேசு கந்தர்மடத்து ஆறு முகம் இளையதம்பி தம்பித்துரை முருகேசு முதலானோர் செல் லப்பா சுவாமிகள் மகி மையை அறிந்து அவரை அண்டி வணங்கினர்.


இப்படியான நிலை உண்டான போதும் சாதாரண பொதுமக்கள் தன்னை நெருங்காத வண்ணம் விசர் செல்லப்பராகவே விளங்கியி ருக்கிறார். இந்தத் திறமை பற்றி இவர் சீடரான யோக சுவாமிகளே ஒருமுறை "நாற்பது வருட காலமாக விசர் நாடகத்தை திறமையாக நடத்தியிருக்கிறார்” என்ற கருத்தை வெளியிட் டிருக்கிறார்.

பொது நிலையில் விசர் செல்லப்பராக இருந்தாலும் தன்னை நம்பியவர்க்கு நோய் தீர்த்தல், செல்வப்பேறு. பிள்ளைப்பேறு அருளுதல் போன்ற அருள்பாடுகளையும் நிகழ்த்தி ஞானியர் பெருமைக்கு உரியவராக விளங்கியமை உலகில் உள்ள அனைத்து சமயங்களும் வற்புறுத்தும் ஞானியர் வழிபாட் டின் மகிமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

உலகில் ஆங்காங்கு தோன்றிய ஞானியரில் பலர் தாமே அருட் செயல்களை புரிந்து உலக ம் வரை ஈடேற்றுபவராகவும் தம் சீடர் வழி யில் அருட் செயல்களைப் புரிந்து உலக மக் களை உய்விப்பவராகவும் இருந்திருக்கிறார் கள். செல்லப்பா சுவாமிகள் இராம கிருஷ்ணர் முதலியோர் தம் சீடர்கள் மூலம் உலக மக்களை உய்ய அருளியவரை அவதானிக்க முடிகின்றது.

செல்லப்பா சுவாமிகள் பெருமை தோற் றம் அவரை வணங்குவதன் பயன் முதலிய பல உயர்ந்த கருத்துகளை நற்சிந்தனை மூலம் அறிய முடிகின்றது. இத்துடன், யோக சுவாமிகள் பூரண ஞானியாக தன்னை அண்டியவரை ஆதரித்து காக்கும் அருளாளராகவே விளங் கிய நிலையில் தன் குரு செல்லப்பா சுவாமி களை எங்ஙனம் வணங்கியுள்ளார் எங்ஙனம் நமக்கெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பதை அவரின் நற்சிந்தனை மூலம் அறிந்து பணிந்து நம்மை நாமே பாக்கியவான்களாக்க வேண்டும்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - 31 திங்கட்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 17
நல்ல நேரம் :6.00 - 7.30
ராகு காலம் :7.30 - 9.00
திதி : திருதியை




**மேடம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**கடகம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**கன்னி**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனை குறித்து அவ்வப்போது யோசிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

# திரைமறைவில் அரங்கேறும் முஸ்லிம் விரோத செயல்கள்

## எமது நாட்டு அரசியல் போக்குகளும் ஆரோக்கியமாக தென்படவில்லை!

*மன்னார், மார்ச் 31*

"எமது நாட்டு அரசியல் போக்குகளும் ஆரோக்கியமாகத் தென்படவில்லை. அரச உயர்மட்டத்தில், திரைமறைவில் அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோத செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்"- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"சர்வதேச அளவில் முஸ்லிம்கள் பெரும் சவால்களை எதிர்கொள்ளும் நிலையிலேயே, முஸ்லிம்கள் இம்முறை புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாட நேர்ந்துள்ளது. நெருக்கடிகள் நீங்கி, நிம்மதி ஏற்பட இந்த நாளில் பிரார்த்திக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான அத்துமீறல்கள் எல்லைமீறியுள்ளன. காஸாவில் ஈவிரக்கமின்றி இனவழிப்புச் செயல்பாடுகளை முன்னெடுக்கும் இஸ்ரேலிய அரசு, முழு முஸ்லிம்களையும் ஆத்திரமூட்டியுள்ளது. இவர்களின் கொடூரங்கள் இல்லாதொழிய அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

எமது நாட்டு அரசியல் போக்குகளும் ஆரோக்கியமாகத் தென்படவில்லை. அரச உயர்மட்டத்தில், திரைமறைவில் அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோத செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். சமூகங்களை நேசிக்கின்ற மற்றும் மத நம்பிக்கைகளை கௌரவப்படுத்துகின்ற நிலைப்பாட்டுக்கு இந்த அரசாங்கம் வரவேண்டும்"- என்று அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (எ)

---

நிலத்தடி நீரில் எண்ணெய் படலமா?

# சுன்னாகத்தில் 5 கிணறுகளின் மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்புவதற்கு தீர்மானம்

*யாழ்ப்பாணம், மார்ச் 31*

சுன்னாகம் நிலத்தடி நீரில் மீண்டும் எண்ணெய் படலம் ஏற்பட்டுள்ளதா? என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்வளங்கள் சபைக்கு உடுவில் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை உடுவில் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் நடைபெற்றபோது சமூகமட்ட பிரதிநிதி ஒருவர் முன்வைத்த கோரிக்கைக்கு இவ்வாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட நிலையில் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சுன்னாகம் நிலத்தடி நீரில் நொதேன் பவர் தனியார் நிறுவனத்தால் வெளியேற்றப்படுகின்ற கழிவு எண்ணெய் நிலத்துக்கு கீழ் இறக்கப்பட்ட நிலையில் மக்களின் குடிநீர் கிணறுகள் தொடக்கம் விவசாய கிணறுகள் வரை கழிவு ஒயில் தாக்கம் உணரப்பட்டது.

சிலர் அதனை மறுத்து வந்த போதும் இறுதியில் உண்மை கண்டறியப்பட்ட நிலையில் தற்போது சுன்னாகம் பிரதேச மக்களின் குடிநீர் கிணறுகள் தொடர்பில் என்ன நிலைப்பாடு இருக்கிறது என்பது தொடர்பில் மக்களுக்குத் தெரியாது.

ஏனெனில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் கிணறுகள் தொடர்பான பரிசோதனை அறிக்கைகளை எடுத்ததாக நாங்கள் அறியவில்லை.

அது மட்டுமல்லாது மருதனார் மடப் பகுதியில் அமைந்துள்ள வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையத்தில் அதிகளவிலான அரச நிறுவனங்களின் வாகனங்கள் சுத்திகரிப்பு இடம்பெறுகின்றது.

குறித்த சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதி வளமான விவசாய நிலங்களைக் கொண்ட பகுதியாக காணப்படுகின்ற பகுதியில் குறித்த சுத்திகரிப்பு நிலையத்தின் எண்ணெய் கழிவுகள் அங்கு செல்கின்றன என்பது தொடர்பில் எமக்கு ஏதும் தெரியாது.

இவ்வாறான நிலையில் முன்பு ஏற்பட்ட பாரிய அனர்த்தம் போன்று எதிர்காலத்தில் கழிவு எண்ணெயினால் ஏற்படும் ஆபத்தை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அபிவிருத்திக் குழுத் தலைவர், சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் தாக்கம் தொடர்பில் நான் நன்கு அறிவேன்.

ஆகையால் பொதுமக்களின் குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கும் நிலையில் நீர்வளங்கள் சபை அதிகாரிகள் சுன்னாகம் பகுதியில் உள்ள 5 குடி நீர் கிணறுகளின் நீர் மாதிரிகளில் எண்ணெய் படலம் இருக்கின்றதா என்பது தொடர்பில் பரிசோதனை அறிக்கையை பிரதேச அபிவிருத்திக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

அதேபோன்று, வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயில் எவ்வாறு வெளியேற்றப் படுகிறது என அறிக்கை சமர்ப்பிப்பதோடு சுற்றாடல் அதிகார சபையால் குறித்த சுத்திகரிப்பு நிலையத்துக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உடுவில் பிரதேச சபைச் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

---

# யாழில் வீதியில் மயங்கிய வயோதிப பெண் மரணம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 31*

யாழில் வீதியில் சென்று கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் மயங்கி கீழே விழுந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். புங்குடுதீவு, 14ஆம் வட்டாரத்தை சேர்ந்த சி. வசந்தா (வயது - 68) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். இதன்போது, திடீரென மயங்கி கீழே விழுந்தார். இந்த நிலையில், அவர் புங்குடுதீவு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரணம் விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்வாதிகளுக்கு தண்டனை; ஒருபோதும் நிறுத்தப்படாது!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, மார்ச் 31

**ஊழல்வாதிகளுக்கு தண்டனை வழங்கும் செயல்பாடு ஒருபோதும் நிறுத்தப்படாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

பெலியத்த பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்காக சேவை செய்யாத பல அரசியல்வாதிகள் இன்று தோல்வியைத் தழுவியுள்ளனர். எந்தவகையில் சதிகளும், முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டாலும் தற்போது ஊழல்வாதிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒருபோதும் நிறுத்தப்பட மாட்டாது.

பலருக்கு எதிராக தற்போது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், சர்ச்சைக்குரிய பல சம்பவங்கள் தொடர்பில் ஓரிரு மாதங்களில் வழக்கு தொடரப்படவுள்ளது.

அதேநேரம், இன்று பல வழக்கு விசாரணைகளிலிருந்து நீதிபதிகள் விலகுகின்றனர். இது சிறந்த சமிக்ஞை அல்ல. நீதிபதிகள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பிலிருந்து விலகக்கூடாது.

பொலிஸ்மா அதிபர் ஒருவர் கைதாவார் என வரலாற்றில் எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். தற்போது அது நடந்துள்ளது. கடந்த காலங்களில் பொலிஸ்மா அதிபர்கள் கைதாகாமல் இருந்தமைக்கு அவர்களின் நேர்மையே காரணம் என கூறமுடியாது.

எனவே, பதவி பேதமின்றி எதிர்காலத்தில் மேலும் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன், அரசியல்வாதிகளுக்காக பணியாற்றிய பல அரச அதிகாரிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் விசாரணைகளில் நடைபெறும் - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் கைதான 31 பேர் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, மார்ச் 31

சிவனொளிபாதமலை யாத்திரையின் போது பல்வேறு வகைப் போதைப் பொருட்களுடன் பயணித்த 31 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்த 20 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலை யாத்திரையின் போது போதைப் பொருட்களுடன் பயணிப்பவர்களைக் கைது செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைக்கு அமைய, பொல்பிட்டி, மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணி ஆகிய பகுதிகளில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூ. 14 ஆயிரம் கோடி மதிப்பான திறைசேரி உண்டியல் ஏலம்!

கொழும்பு, மார்ச் 31

14 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. (ஐ)

# முட்டை விலையை உயர்த்த கோரிக்கை

கொழும்பு, மார்ச் 31

முட்டை ஒன்றின் விலையை 10 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் என்று கோழி பண்ணை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தையில் இந்த நாட்களில் முட்டையின் விலை குறைவடைந்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. ஒரு முட்டையின் விலை 25 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் காரணமாக கோழி பண்ணை உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக கூறுகின்றனர்.

ஒரு முட்டையின் விலையை குறைந்தபட்சம் 10 ரூபாயால் உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தென்னக்கோனுக்கு எதிரான பிரேரணை அரசமைப்பு விதிகளுக்கு முரணானது

கொழும்பு, மார்ச் 31

தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்குவதற்கு கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை சபாநாயகர் ஏற்றிருப்பது அரசமைப்பு விதிகளுக்கு முரணானது என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தென்னக்கோனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் தொடர்பாக உயர் நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்வது பாராளுமன்றத்தின் அதிகாரத்தை குறைமதிப்புக்கு உட்படுத்துவதாகும்.

தற்போது பிரச்னை என்னவென்றால், முன்னாள் ஜனாதிபதி தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமித்தது. அந்த நியமனத்தை மேற்கொள்ளும்போது அரசமைப்பு சபையின் அனுமதி பெறப்பட்டதாக சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.

இருப்பினும், உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் மூலம் அவரின் நியமனம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில், தென்னக்கோன் பொலிஸ் மா அதிபர் அல்ல. நீதிமன்ற உத்தரவு இன்னும் அமுலில் உள்ளது. உயர் நீதிமன்ற உத்தரவு அமுலில் இருக்கும் அதேவேளையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் கையழுத்திட்டு தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குமாறு பிரேரணை சமர்ப்பித்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தின் கீழ், அத்தகைய பிரேரணையை அப்போது பதவியில் இருந்த பொலிஸ் மா அதிபருக்கு எதிராக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இதன்படி, உயர் நீதிமன்றத்தால் அவர் பொலிஸ்மா அதிபர் இல்லை என்று உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார்.


இது அரசமைப்பு சட்டத்தின், 2002 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க சிரேஷ்ட அதிகாரிகளை நீக்குதல் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளுக்கு முற்றிலும் முரணானது - என்றார். (ஐ)

# உதவி தொகை பெறும் முதியோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு

கொழும்பு, மார்ச் 31

முதியோர் உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், உதவி தொகை பெறுபவர்களின் எண்ணிக்கையை 10 இலட்சமாக அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.



இந்த விடயம் குறித்த கலந்துரையாடல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பண்டிகைகால விளையாட்டு வழிகாட்டி தொகுப்பு வெளியீடு

கொழும்பு, மார்ச் 31

பண்டிகைக் காலத்தில் நாட்டில் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளின்போது ஏற்படும் விபத்துகள் மற்றும் கடுமையான சுகாதார நிலைமைகளை தடுப்பதற்காக வழிகாட்டுதல் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவு இந்த வழிகாட்டுதல் தொகுப்பை வெளியிட்டுள்ளது.

கிராமத்தைச் சுற்றி ஓடுதல், மராத்தான் போட்டிகள், சைக்கிள் ஓட்டம் போன்ற நீண்ட நேரம் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பவர்கள், போட்டிக்கு குறைந்தபட்சம் 6 வாரங்களுக்கு முன்பு பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

மேலும், அடையாளம் காணப்பட்ட நோய் நிலைமைகளை கொண்ட பங்கேற்பாளர்கள், தங்கள் வழக்கமான சுகாதார சேவை வழங்குநரிடமிருந்து அந்த விளையாட்டு நிகழ்வில் பங்கேற்க தகுதியானவர் என்பதை உறுதிப்படுத்தும் மருத்துவ அனுமதி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## விகாரதிபதி கொலை 26 வயது இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 31

அநுராதபுரத்தில் விகாரா திபதியை வெட்டிக் கொன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட சந்தேகநபர் விளக்கம றியல் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நீர்கொழும்பு ஹரஸ் மாவத்தை பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொல்லப்பட்ட விகாரதிபதியிடம் முச்சக்கரவண்டி சாரதியாக பணியாற்றியவர் என்று தெரிய வருகிறது.

26 வயது இளைஞரே விகாரதிபதியின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தே கத்தில் கைது செய்யப்பட்டி ருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# நாட்டிலிருந்து முதன்முதலாக ரின்மீன்கள் ஏற்றுமதியாகின



கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்கள் வரலாற்றில் முதல் தடவையாக வெளிநாட்டுக்கு நேற்றுமுன்தினம் ஏற்றுமதி செய்யப்பட் டன.

புத்தளம் - மதுரங்குளியில் உள்ள "ஓஷன் ஃபூட்" தொழிற்சாலை வளாகத்தில் குறித்த ரின் மீன்களின் ஒரு தொகுதி உத்தியோகபூர்வமாக ஏற்றுமதி செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு இந்த ரின் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. மீன்வளம், மீன்பிடி, நீரியவள மற்றும் கடல்வள இராஜாங்க அமைச்சர் ரத்ன கமகே தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அஜித. கிஹான், மீன்பிடி, நீரியவள மற்றும் கடல்வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செய லாளர் சம்பத் மந்திரிநாயக, மீன்பிடி, நீரியவள மற்றும் கடல்வள அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் சுசந்த கஹ வத்த, வர்த்தகம் மற்றும் உண வுப் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் குமுது மெகஹகே உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், ரின் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதி உரிமத்தை ஓஷன் ஃபூட் தொழிற்சாலை நிர்வாகத்திடம் இராஜாங்க அமைச்சரால் உத்தியோகபூர்வமாக கைளிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பு கூறவேண்டும்!

## மாத்தளையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள



கொழும்பு, மார்ச் 31

**நாட்டில் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். இந்தக் காலப் பகுதியில் மாத்தளை மாவட்டத்துக்கு பொறுப்பான இராணுவ ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக் கூறவேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பிலேயே காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றிய செயலாளர் மரீன் நிலாஷானி கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

மேலும், "2012 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்ட மருத்துவமனையில் மனித புதைகுழியொன்று கண்டறியப்பட்டது. இதுதொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில், 1986 - 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே இதுதொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒனறை அமைத்து இதனை மூடிமறைத்து விட்டார்கள்.

1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்துக்கு பொறுப்பான இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவின் சகோதரராக இருந்தமையாலேயே இந்த விடயம் மூடி மறைக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ கடமையாற்றி காலப்பகுதியில் மாத்திரம் மாத்தளை மாவட்டத்தில் 720 வரையிலானவர்கள் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இருந்த காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்திலிருந்த சகல பொலிஸ் நிலையங்களுக்கும் ஐந்து வருடங்களுக்கு மேல் பழமையான சகலரின் ஆவணங்களையும் நீக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே,

பட்டலந்த வதைகூ டத்தை ரணில் முன்னெடுத்து சென்ற காலத்தில், மாத்தளை முன்னெடுக்கப்பட்டு வந்த சகல வதை கூடங்களையும் செயல் படுத்தியது - வழிநடத்தியது கோட்டாபய ராஜபக்ஷ ஆவார்" - என்றார். (ஐ)

# சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும்பணி நாளை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 29

2024 கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 66 மத்திய நிலையங்களில் இந்த விடைத்தாள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை முதல் 10ஆம் திகதி வரை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் முதற்கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மதிப்பீட்டு பணிகளில் நாடு முழுவதிலும் 16 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தெங்கு பயிர் செய்கையாளருக்கு இன்று முதல் உர மானியம்!

கொழும்பு, மார்ச் 31

தெங்கு பயிர் செய்கையாளர்களுக்கு இன்று முதல் மானிய முறையில் உரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட 27 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உரத்துடன் யூரியாவை கலந்து தெங்கு பயிர்ச்செய்கைக்கான உரம் தயாரிக்கப்பட்டு வருவதாக அரச உர நிறுவனம் அறிவித்துள்ளது.

சந்தையில் 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் 50 கிலோ உர மூடையை 4,000 ரூபாய்க்கு மானிய விலையில் விற்பனை செய் வதற்கு எதிர்பார்த்துள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# யால தேசிய பூங்கா தினமும் 2 மணி நேரம் மூடப்படும்!

கொழும்பு, மார்ச் 31

யால தேசிய பூங்காவை தினமும் 2 மணித்தியாலங்கள் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெப்பமான காலநிலையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்படடுள்ளது. மதியம் 12 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பூங்கா மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் வரும் சுற்றுலா பயணிகள் படங்கல சுற்றுலா விடுதிக்குள் தங்குமாறு வனவிலங்கு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# விசேட மருத்துவரை தாக்கியவர் கைது!

கொழும்ப, மார்ச் 29

கேகாலை மாவட்ட பொது மருத்துவமனையில் விசேட மருத்துவர் ஒருவரை தாக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மருத்துவமனைக்கு முன்னால் சந்தேக நபர் மருத்துவரை தாக்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 29 வயதுடைய கண்டியைச் சேர்ந்தவர் ஆவார். தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த விசேட மருத்துவர் கேகாலை மாவட்ட பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கைதான சந்தேக நபர் கேகாலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# கொழும்பை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை எம்மிடம் தாருங்கள்!

## பாட்டலி சம்பிக்க ரணவக்க



கொழும்பு, மார்ச் 31

2015 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக முன்னெடுத்த கருத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவோம் கொழும்பு நகரை அபிவிருத்தி செய்யும் ஆணையை எமக்கு வழங்குங்கள் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய குடியரசு முன்னணியின் வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் மத வழிபாடுகளுடன் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாங்கள் முன்னெடுத்த பணிகள் அனைத்தும் 2019 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்டன. குறிப்பாக கொழும்பு நகரின் கழிவகற்றல், திண்மக்கழிவகற்றல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டோம்.

கொழும்பு நகரில் வாழ்பவர்களில் 70 சதவீதமானோர் குறைவான வருமானத்தை பெறும் தரப்பினர்களாவார். இவர்கள் ஏழைகள். இவர்களில் ஒரு பகுதியினருக்கு தொடர் மாடி குடியிறுப்புக்களை வழங்கினோம். மிகுதியாகவுள்ளவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுப்போம்.

கொழும்பை அழகுபடுத்துவோம். கொழும்பில் எவ்வித அபிவிருத்திகளையும் மேற்கொள்ளாதவர்கள் இன்றும் வாய்சொல் வீரர்களாக பொய்யுரைக்கிறார்கள். கொழும்பு நகரை அபிவிருத்தி செய்யும் ஆணையை எமக்கு வழங்குங்கள் - என்றார். (ஐ)

# ரி-56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

கொழும்பு, மார்ச் 31

மாத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுது கங்கை வனப் பகுதியில் பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி -56 ரக துப்பாக்கி மற்றும் 2 தோட்டாக்கள் சனிக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்த ரி-56 துப்பாக்கியை மறைத்து வைத்த சந்தேக நபர்களை கைது செய்ய மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தலைவராக பதவியேற்றார் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய



கொழும்பு, மார்ச் 31

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ரஜீவ் அமரசூரிய நேற்று முன்தினம் சனிக்கிழமை பதவியேற்றார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ரஜீவ் அமரசூரிய தெரிவு செய்யப்பட்டார்.

இவர் சட்டத்தரணிகள் சங்கத்தின் 29ஆவது தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடந்த வருடத்தில் மட்டும் 9,200 காசநோயாளர்கள் அடையாளம்!

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் கடந்த வருடம் காசநோயாளர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 200 ஆகப் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், 5 ஆயிரத்து 291 ஆண்கள், 3 ஆயிரத்து 259 பெண்கள், மற்றும் 250 சிறுவர் நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2035 ஆம் ஆண்டுக்குள் காச நோயாளிகளின் எண்ணிக்கை 90 சதவீதத்தாலும் காச நோயால் ஏற்படும் இறப்புகளை 95 சதவீதத்தாலும் குறைப்பதே எமது நோக்கமென சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் இருமல் லேசான காய்ச்சல், உடல் எடை இழப்பு, பசியின்மை, இரவில் வியர்த்தல், சோர்வு மற்றும் உடல்நலக் குறைவு ஆகியவை காச நோயின் அறிகுறிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் உடனடியாக மருத்துவ உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதாரம், பாதுகாப்பு கடல்சார் களத்துடன் பிணைந்துள்ளது!

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



கொழும்பு, மார்ச் 31

**இந்தோ - பசுபிக் பிராந்தியம் உலகின் மிகவும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் செல்வாக்குமிக்க பகுதிகளில் ஒன்றாகத் தொடர்கிறது. ஒரு தீவு நாடாக இலங்கையின் பொருளாதார பாதுகாப்பும் தேசிய பாதுகாப்பும் நேரடியாக கடல்சார் களத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக கடல்சார் வர்த்தக வழிகள் அமைந்துள்ளதால் இவற்றை பாதுகாப்பதன் மூலம் இலங்கை அதன் எதிர்காலத்தை பாதுகாக்கிறது என்றும் அவர் கூறியுளார்.

தேசிய பாதுகாப்பு கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையர்களில் கால்பகுதியினர் இன்னும் வறுமையில் வாழ்கின்றனர். எனவே, நீண்ட காலமாகத் தேவைப்படும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் இலங்கை நீண்ட கால வளர்ச்சி பாதையில் செல்வதை உறுதி செய்வதற்கு அவசியமான அடுத்த படியாகும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியம் உலகின் மிகவும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் செல்வாக்குமிக்க பகுதிகளில் ஒன்றாக தொடர்கிறது. ஒரு தீவு நாடாக, இலங்கையின் பொருளாதார பாதுகாப்பும் தேசியப் பாதுகாப்பும் நேரடியாக கடல்சார் களத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, திறந்த, சுதந்திரமான மற்றும் அமைதியான இந்தோ - பசுபிக் பகுதியை பராமரிப்பதில் அனைவருக்கும் பங்கு உள்ளது. இந்திய பெருங்கடலில் இலங்கையின் முக்கியமான அமைவிடம் காரணமாக பிராந்தியத்தில் வர்த்தக வழிகள் பாதுகாப்பாகவும் தடையின்றியும் இருப்பதை உறுதி செய்வதற்கு கடல்சார் கள விழிப்புணர்வு அவசியமாகும்.

ஏனெனில், இலங்கையின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக கடல்சார் வர்த்தக வழிகள் அமைந்துள்ளன. இவற்றைப் பாதுகாப்பதன் மூலம், இலங்கை அதன் எதிர்காலத்தை பாதுகாக்கிறது. கடல்சார் பாதுகாப்பு துறைமுகங்கள் அல்லது கடற்படை உள்கட்டமைப்பில் உள்ள அச்சுறுத்தல்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை.

கடற்கொள்ளை, கடத்தல், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மீன்பிடித்தல் மற்றும் மனித கடத்தல் உள்ளிட்ட கடல்சார் களத்தில் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் என புதிய சவால்களுடன் விரிவடைகிறது.

இலங்கையின் விரிவான பிரத்தியேக பொருளாதார மண்டலம் தேசிய பொருளாதார பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். ஏனெனில் இது கடல் வளங்களால் நிறைந்துள்ளது. ஆனால் இது சட்டவிரோத மீன்பிடித்தலுக்கான இலக்காகவும் அமைகிறது. அமெரிக்கா இந்த முக்கியமான பிராந்தியத்தில் உறுதியான பங்காளியாக தொடர்ந்தும் இருக்கும். தகவல் பரிமாற்றம் மற்றும் கூட்டுப்பாதுகாப் புக்காக கடல்சார் கள விழிப் புணர்வு போன்ற துறைகளை மேம்படுத்துவோம் - என்றார். (ஐ)

# கிராமிய மருத்துவமனைகளிலும் விசேட மருத்துவர்களின் சேவை!

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 31

கிராமிய மருத்துவமனைகளிலும் விசேட மருத்துவர்களின் சேவையை விரிவுபடுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது ஆதார மருத்துவமனைகள் அல்லது அவற்றுக்கு அடுத்த தரத்திலான மருத்துவமனைகளில் மாத்திரமே விசேட மருத்துவர்களின் சேவை காணப்படுகிறது. இதனால், கிராமப்புற மக்களுக்கு விசேட மருத்துவர்களின் சேவையை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போயுள்ளதாகவும் சுகாதார பிரதியமைச்சர் மருத்துவர் விஜயமுனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டதாவது,கிராமிய மருத்துவமனைகளில் விசேட மருத்துவர்களின் சேவையை விரிவுபடுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது ஆதார மருத்துவமனைகள் அல்லது அவற்றுக்கு அடுத்த தரத்திலான மருத்துவமனைகளில் மாத்திரமே விசேட மருத்துவர்களின் சேவை காணப்படுகிறது. இதனால், கிராமப்புற மக்களுக்கு விசேட மருத்துவர்களின் சேவையை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது.

எனவே, முன்னோடி வேலைத்திட்டமாக கண்டி மாவட்டத்தின் 6 மருத்துவமனைகளில் அடுத்தமாதம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். கிராமிய மருத்துவமனைகளில் வாரத்துக்கு ஒருநாள் விசேட மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொடுக்க இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக, மருத்துவர்கள் தாமாகவே விருப்பத்துடன் முன்வந்துள்ளனர். கிராமிய மருத்துவமனைகளில் இருந்து நகர மருத்துவமனைகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை குறைப்பதே இதன் நோக்கமாகும்- என்றார். (ஐ)

# இளையோரிடையே எச். ஐ. வி. தொற்று பரவல் அதிகரிப்பு!

## 15 - 24 வயது பிரிவில் 115 தொற்றாளர்

கொழும்பு, மார்ச் 31

நாட்டிலுள்ள இளைஞர்களிடையே எச். ஐ. வி. தொற்று அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட 115 பேருக்கு எச். ஐ. வி. தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் நாட்டில் 824 பேருக்கு எச். ஐ. வி. தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. இவர்களில் 718 பேர் ஆண்கள் என குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேநேரம், எய்ட்ஸ் நோய் 47 பேர் உயிரிழந்தனர். இலங் கையில் எச். ஐ. வி. பரவல் அதிகரித்து வருவதால் உடனடியாக பரிசோதனை செய்துகொள்ளுமாறு தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# போலி இலக்கத்தகடுகள் தயாரிப்பு நிலையம் முற்றுகை!

கொழும்பு, மார்ச் 31

போலி இலக்கத்தகடுகளை தயாரிக்கும் நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - சீதுவை பகுதியில் மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 56 வயது நபரே கைதாகியுள்ளார். இதன் போது, 3 போலி இலக்கத் தகடுகள், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முத்திரை பதித்த ஸ்ரிக்கர்கள், தேசிய சின்னம் பொறித்த 67 ஸ்ரிக்கர்கள் மற்றும் இலக்கத் தகடுகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பிற உபகரணங்களையும் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். (ஐ)

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

கொழும்பு, மார்ச் 31

ரமழான் பண்டிகையை முன்னிட்டு முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளை செவ்வாய்க் கிழமை முதலாம் திகதி விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கல்வி நடவடிக்கைகளை மீண்டும் செயல்படுத்துவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை அவசியம்!

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 31

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது அரச சொத்துகள் முறைகேடாக பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல தரப்பினரிடமும் கேட்டுக் கொள்கிறோம். மாறாக, ஏதேனுமொரு தரப்பினர் தேர்தல் சட்டங்களுக்கெதிராக செயல்பட்டால் அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களை போன்று இம்முறை தேர்தலிலும் அரச சொத்துகள் முறைகேடாக பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தேர்தல் ஆணைக்குழுவால் இது குறித்த சுற்று நிருபமும் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய அரச அதிகாரிகள் தமது சேவை நேரத்தில் வேட்பாளர்கள் தொடர்பான பிரசாரங்களை முன்னெடுப்பது சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

இதேபோன்று ஏதேனும் அரச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும் போது அவை எந்தவகையிலும் எந்தவொரு வேட்பாளருக்குமான பிரசாரமாக அமைந்து விடக்கூடாது. இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பகங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்தும். அரசமைப்புக்கு அமைய இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு காணப்படுகிறது.மேலும் அரச வாகனங்களை பயன்படுத்துவதிலும் வரையறைகள் காணப்படுகின்றன. அரச தேவைகளுக்கு மாத்திரமே அவை பயன்படுத்தப்பட வேண்டும். மாறாக, தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டால் அதனுடன் தொடர்புடை யவர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது மாத்திரமின்றி குறித்த வாகனத்துக்கு உரித்துடையவர்களே அதற்கான பொறுப்பையும் ஏற்க வேண்டும் - என்றார். (ஐ)

வெலிகம துப்பாக்கிச்சூடு:

# டிரான் அலஸ் சி. ஐ. டிக்கு விசாரணைக்கு அழைப்பு



கொழும்பு, மார்ச் 29

முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவை சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்வதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்வதற்காக முன்னாள் அமைச்சர் இன்று அழைக்கப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான தகவல்களை முன்னாள் அமைச்சர் அறிந்திருப்பாரா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக குறித்த அதிகாரி குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## தமிழ் அரசு வேட்பாளர்கள் அறிமுகம்



காரைதீவு, மார்ச் 31

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற காரைதீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் நடைபெற்றது.

அந்தக் கட்சியின் காரைதீவுக் கிளை, விவேகானந்த விளையாட்டுக் கழக தலை மையகத்தில் நடத்திய இந்தக் கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்க ளான இரா. சாணக்கியன், ஜி. சிறீநேசன், சி. சிறீநாத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக, காரைதீவு சிறீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். (எ)

# இரத்த ஆடை அணிந்தபடி வலிகொண்ட பெருநாள்!

### முஸ்லிம்கள் நிலை குறித்து உதுமாலெப்பை எம். பி. கவலை



கல்முனை, மார்ச் 31

**பலஸ்தீன மண்ணில் நோன்பிருந்து புத்தாடைக்கு பதிலாக இரத்த ஆடை அணிந்தபடி வலிகொண்ட பெருநாளை முஸ்லிம்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை கவலை வெளியிட்டுள்ளார்.**

ரமழான் மாதத்திலுள்ள புனிதம் என்பது மனங்களிலும் வாழ்வினிலும் பின்பற்றப்படும் போது தான் இம்மையிலும் மறுமையிலும் ஒளி கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோன்பினாலும் தவத்தினாலும் உருவாக்கப்பட்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியின் போராளிகளையும் அபிமானிகளையும் முஸ்லிம் மக்கள் அனைவரையும் பெருநாள் வாழ்த்துகளால் ஆசித்துக் கொள்கிறேன்.

இன்றைய நாட்களில் நமது உறவுகள் பலஸ்தீன மண்ணில் அல்லாஹ் எழுதிய படியான வெற்றிக்குரிய நாள் வரை எதிராளிகளின் துரோகத்தனத்தால் வஞ்சிக்கப்பட்டு கொண்டு நோன்பிருந்து புத்தாடைக்கு பதிலாக இரத்த ஆடை அணிந்தபடி வலிகொண்ட பெருநாளை அனுபவித்துக் கொண்டிருப்பதையும் இவ்வேளையில் கனத்த மனதுடன் ஞாபகப்படுத்தி உணர்வுகளால் பங்கு கொள்கிறேன்"- என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். ரமழான் பண்டிகையை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு செயலமர்வு



மட்டக்களப்பு, மார்ச் 31

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக சிறுவர் - பெண்கள் அபிவிருத்திப் பிரிவு மற்றும் சமுர்த்தி பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு செயலமர்வும் பிரதேச சிறுவர் சபை அங்குரார்ப்பண நிகழ்வும் பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

"உரிமைகளை பாதுகாப்போம் - கடமைகளை செய்வோம்" வேலைத் திட்டத்தின் கீழ் கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுக்களின் ஊடாக சிறுவர்களிடையே உளநல விருத்தியை மேம்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு இந்தச் செயலமர்வு பல்வேறு கட்டங்களின் ஊடாக முழு நாள் பயிற்சி செயலமர்வாக நடைபெற்றது.

இதன் முதற்கட்டமாக களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ. உதயசூரியா "பொறுப்புள்ள இளமைப் பருவத்தின் முக்கியத்துவம்"எனும் தலைப்பிலான விழிப்புணர்வு கருத்துரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறுவர்களிடையே திறன் விருத்தி செயல்பாடுகளினூடாக உளவிருத்தியை மேம்படுத்தும் வகையில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. ராஜதிலகனால் சிறுவர்களிடையே பாடல் உருவாக்கம், கதை எழுதுதல், ஓவியம் வரைதல் மற்றும் விவாதம் முதலான செயல்பாடுகளுக்கான குழு முறையிலான பயிற்சிகள் நடைபெற்றன. (எ)

# "பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்"

திருகோணமலை, மார்ச் 31

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கான பாதுகாப்பை தேர்தல்கள் ஆணைக் குழு உறுதிப்படுத்த வேண்டும் என்று திருகோணமலை சோலையடி கிராமத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளர் சி. விஜிதா தெரிவித்தார். திருகோணமலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "பெண்கள் அரசியலுக்குள் வர வேண்டும் என தத்தளித்தாலும் அவர்களுக்கான பயிற்சிகள் கிராமப்புறம் தொடக்கம் கொழும்பு வரை நடைபெறுகிறது. சில கட்சிகள் பெண்களுக்கு சரியான அங்கீகாரம் வழங்குவதில்லை. இதன் காரணமாக சுயேச்சை குழு மூலமாகவும் களமிறங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது"- என்றார். (எ)

# காஸா உறவுகள் வாழ்வில் வெற்றி ஏற்பட வேண்டும்

### இம்ரான் எம். பி. தெரிவிப்பு



திருகோணமலை, மார்ச் 31

வலிகளோடு கடந்து போகும் காஸா உறவுகளின் வாழ்வில் வெற்றியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தவல்ல ஆரம்பத்தை இப்புனித நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ் அமைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

புனித ரமழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"மலரும் இப் புனிதப்பெருநாள் இம்மண்ணில் அமைதியையும் நிம்மதியையும் சுபீட்சத்தையும் சுமந்து வரவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.


அல்குர்ஆன் எமது வாழ்க்கை வழிகாட்டி என்ற நிலையை எவருக்காகவும் நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

மனி தத்தை வாழ வைக்கும் நீதியை நிலைநாட்டும் சகவாழ்வுக்கான போராட்டமே எம் வழிமுறை. எல்லாவற்றுக்கும் மேலாக இறை திருப்தியே எமது இலக்காக இருக்கின்றது.

இந்த உறுதியோடு இன்று எம்மை அச்சுறுத்தும் அசாதாரண சூழல், மனித உரிமை மீறல்கள், மத துவேஷங்கள், அத்துமீறல்கள் அனைத்தும் நீங்கி நம் நாடு எழுச்சி பெற இப்புனித நாளில் அல்லாஹ்வைப் பிரார்த்திகின்றேன்.

வலிகளோடு கடந்து போகும் காஸா உறவுகளின் வாழ்வில் வெற்றியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தவல்ல ஆரம்பத்தை இப்புனித நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ் அமைக்க வேண்டும் என்றும் இரு கரமேந்தி பிரார்த்திக்கின்றேன்"- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)





இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிய கல்முனைக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'ஐக்கியம் சகவாழ்வுக்கான' இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்முனை மையோன் பிளாஸா கல்யான மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் நிலநடுக்கத்தால் 2000 பேர் இதுவரை உயிரிழப்பு!



நேபிடாவ், மார்ச் 31

**மியன்மாரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துள்ளது. மேலும் கட்டட இடிபாடுகளில் சிக்கி 2,300இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.**

மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளில் கடந்த 28 ஆம் திகதி அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக பதிவான நிலையில், நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்களால் மியன்மாரில் பல நகரங்களில் வானுயர நின்ற கட்டடங்கள் சீட்டு கட்டுப்போல் சரிந்து, தரைமட்டமாகின. வீதிகள் பெயர்ந்தன. பாலங்கள் இடிந்தன. அத்தோடு இந்த நிலநடுக்கத்தால் மியன்மாரின் மிகப்பெரிய அணையும் உடைந்தது. நிலநடுக்கத்தால் நேபிடாவ், மண்டலே ஆகிய 2 நகரும் பெரும் சேதத்தை சந்தித்தன.

நேபிடாவில் பௌத்த கோவில் உட்பட வரலாற்று சிறப்பு மிக்க கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன. அதே போன்று மண்டலே நகரில் உள்ள பழமையான அரண்மனையும் இடிந்தது. நிலநடுக்கத்தால் தரைமட்டமான கட்டட இடிபாடுகளில் சிக்கி ஏராளமானோர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர்.

ஒட்டு மொத்த நாட்டையும் நிலநடுக்கம் உலுக்கியதை தொடர்ந்து மியன்மார் இராணுவ அரசாங்கம் நாடு முழுவதும் அவசர நிலையை பிரகடனப்படுத்தியது. அத்தோடு நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளை அரசு முடுக்கிவிட்டது. எனினும், இராணுவம்-கிளர்ச்சி குழுக்கள் இடையேயான மோதல் மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகளை சிக்கலாக்கி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே மியன்மாரை புரட்டிப்போட்ட இந்த பயங்கர நிலநடுக்கம் அதன் அண்டை நாடுகளில் ஒன்றான தாய்லாந்திலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியது.

தலைநகர் பாங்கொக் உட்பட தாய்லாந்தின் பல நகரங்களை நிலநடுக்கம் தாக்கியது.

இந்த நிலையில் மியன்மார் மற்றும் தாய்லாந்தில் நிலநடுக்கத்துக்கு 150இற்கும் மேற்பட்டோர் பலியானதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியிருந்தன. நேற்றுக்காலை 08.00 மணி வரையான காலப்பகுதியில் மியன்மாரில் மட்டும் பலி எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துவிட்டதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கட்டட இடிபாடுகளில் சிக்கி 2,300இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நிலநடுக்கத்தால் மோசமான பாதிப்பை சந்தித்துள்ள மியன்மாருக்கு உலக நாடுகள் ஆதரவு கரம் நீட்டி வருகின்றன. இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளும் நிவாரணப் பொருட்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவை மியன்மாருக்கு அனுப்பியுள்ளன.

மியன்மாரில் நேற்று முன்தினம் மதியம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் நேபிடாவை மையமாக கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக பதிவானது. சில வினாடிகளுக்கு நீடித்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. எனினும், புதிய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உடனடி தகவல் இல்லை. அடுத்தடுத்து தாக்கும் நிலநடுக்கங்களால் மியன்மார் மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.(எ)

# பாகிஸ்தான் இராணுவம் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 11 பேர் பலி!



லாகூர், மார்ச் 31

பாகிஸ்தானில் இராணுவம் நடத்திய ட்ரோன் தாக்குதலில் பொதுமக்கள், பயங்கரவாதிகள் என 11 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள், கிளர்ச்சிக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கைபர் பக்துவா மாகாணத்தில் அண்மையில் பயணிகள் ரயிலை பலூசிஸ்தான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கடத்தினர்.

இதையடுத்து, விரைந்து செயல்பட்ட படையினர், கிளர்ச்சியாளர்களை சுட்டு வீழ்த்தி ரயிலில் பணயக் கைதிகளாக இருந்த பயணிகளை மீட்டனர். மேலும், பலூசிஸ்தான் ஆதரவு கிளர்ச்சிப்படையினருக்கு எதிரான நடவடிக்கையை படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர். அதே வேளை, பாகிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கமும் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் மர்டன் மாவட்டம் கட்லங் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவம் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. தலிபான்களை குறிவைத்து நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 3 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் சிலர் தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# மோடி மிகவும் புத்திசாலி ட்ரம்ப் புகழாரம்

வாஷிங்டன், மார்ச் 31

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகவும் புத்திசாலி என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பாராட்டியுள்ளார். இது குறித்து வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப், அடுத்தடுத்து வரி விதிப்புகள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவது குறித்து பேசினார். அப்போது, இந்தியாவுடனான உறவு குறித்தும், வரி தொடர்பான பேச்சுகள் குறித்தும் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த நிலையில், அதற்குப் பதிலளித்து பேசிய ட்ரம்ப், "வரி தொடர்பில் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே பேச்சுகள் நல்ல முறையில் நடந்தது. பிரதமர் மோடி மிகவும் புத்திசாலி. என்னுடைய நல்ல நண்பரும் கூட. நாங்கள் இது தொடர்பில் பேசினோம். இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே அனைத்தும் நல்ல முறையில் நடக்கும் என்று நினைக்கிறேன். சிறந்த பிரதமரை இந்தியா பெற்றுள்ளது"- என்று தெரிவித்தார். (எ)

# போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஹமாஸ் அமைப்பு ஒப்புதல்

கெய்ரோ, மார்ச் 31

பணயக் கைதி விடுவிப்பு, போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து எகிப்து முன்வைத்த செயல் திட்டத்துக்கு ஹமாஸ் அமைப்பு ஒப்புதலளித்துள்ளது.

காஸா முனை பகுதியில் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் ஹமாஸ் அமைப்பினர் ஆட்சி செய்து வருகின்றனர். இந்நிலையில், இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு கொடூரத் தாக்குதல் நடத்தியது. இதில் இஸ்ரேல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காஸா பகுதியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்தும், ஒர் இலட்சத்து 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இந்தச் சூழலில் போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் இஸ்ரேல் கைதிகள் மற்றும் பலஸ்தீனிய கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டனர். இந்த முதல்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இம்மாதம் (மார்ச்) முதலாம் திகதியுடன் முடிவடைந்தது.

2ஆவது கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சுகளில் உடன்பாடு ஏற்படாமல் இருந்த சூழலில், காஸா மீது இஸ்ரேல் தாக்குதலை தொடுத்தது. இதனால், பலஸ்தீனியர்கள் தரப்பில் பலர் பலியாகினர்.

இந்த நிலையில், பணயக் கைதி விடுவிப்பு மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஆகியவற்றுக்கான செயல் திட்டம் ஒன்றை எகிப்து வழங்கியது. இதற்கு ஹமாஸ் அமைப்பு ஒப்புதலளித்துள்ளது. இதன்படி, அமெரிக்க இஸ்ரேலியரான ஈடன் அலெக்சாண்டர் உட்பட 5 பணயக் கைதிகளை விடுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (எ)

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்

பெய்ரூட், மார்ச் 31

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவ கிடங்கை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட்டது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கியது. இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது. இதில், அடுத்தடுத்து பலர் கொலை செய்யப்பட்டனர்.

லெபனானுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்றும் 14 ஆயிரத்துக்கும் கூடுதலானோர் காயமடைந்துள்ளனர் என்றும் லெபனானின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும், லெபனானுக்கும் இடையே கடந்த நவம்பர் முதல் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்து வருகிறது. இந்த நிலையில், பெய்ரூட் நகர் மீது நேற்று முன்தினம் முதன்முறையாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

4 முறை நடந்த இந்தத் தாக்குதல்களில், பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில் அமைந்த ஹடாத் என்ற இடத்தில் கட்டடம் ஒன்று இடிந்து தரைமட்டமானது.

அதில் இருந்த குடியிருப்பு வாசிகள் தப்பி வெளியே ஓடினர். அந்த கட்டடத்துக்கு அருகே இருந்த அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கடைகளும் தாக்குத லில் சேதமடைந்தன.

எனினும், இந்தத் தாக்குதல் பற்றி இஸ்ரேல் கூறும்போது, ஆளில்லா விமானங்களை ஹிஸ்புல்லா அமைப்பு பதுக்கி வைத்திருக்கும் இராணுவ கிடங்கை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது. (எ)

# மியன்மார், தாய்லாந்தில் நிலநடுக்கம் உயிரிழப்பு 10 ஆயிரத்தைத் தாண்டும்

## அமெரிக்க ஆய்வு மையம் அதிர்ச்சி தகவல்

பாங்கொக், மார்ச் 31

மியன்மார், தாய்லாந்தில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தால் உயிரிழப்பு 10 ஆயிரத்தை தாண்டும் என்று அமெரிக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக பதிவான நிலையில், நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் மியன்மாரில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக தகவல் வெளியானது. மேலும், இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. அங்கு மீட்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மியன்மார், தாய்லாந்து ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடக்கும் என்று நிலநடுக்கத்துக்கான அமெரிக்க ஆய்வு மையம் யு. எஸ். ஜி. எஸ். கணித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 3 முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் பொதுமக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலந்த சித்திரவதை முகாமுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் என்ன தொடர்பு?

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை கூறும் தகவல்கள்

(நேற்றைய தொடர்ச்சி)


இந்த வீடமைப்புத் திட்டத்தில் 64 வீடுகள் அமைக்கப்பட்டு இருந்ததுடன், வீட்டின் வசதிகள் மற்றும் தரங்க ளுக்கு அமைய ஏ, பி, சி என அந்த வீடுகள் வகைப்படுத் தப்பட்டிருந்தன.

இந்த வீட்டுத் திட்டமானது, அப்போதைய கைத்தொழில் அமைச்சரான ரணில் விக்ரமசிங்கவின் அமைச்சுக்கு கீழ் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்போதைய கைத்தொழில் அமைச்சரான ரணில் விக்ரமசிங்க, அரச உர கூட்டுத்தாபனத்தின் தலைமை அதிகாரியாகச் செயற்பட்ட அசோக்க சேனாநாயக்கவை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு, படலந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளில் சிலவற்றை பொலீஸ் அதிகாரிகளுக்காக ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளதாக ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச உர கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த வீடுகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பொலீஸ் அதிகாரியாக உதவி போலீஸ் அத்தியட்சராக அப்போது கடமையாற்றிய டக்ளஸ் பீரிஸ் ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைகளின் பிரகாரமே, படலந்த வீடமைப்புத் திட்டத்தில் பொலீஸ் அதிகாரிகளுக்கு வீடுகளை வழங்கியதாகவும், அவர் ஆலோசனை வழங்காத பட்சத்தில் போலீஸ் அதிகாரிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்காது எனவும் அரச உர கூட்டுத்தாபனத்தின் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றிய அசோக்க சேனாநாயக்க, ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கியுள்ளார்.




இந்த வீடுகளை வழங்குவதற்காக எந்தவோர் உடன்படிக்கைகளும் கைச்சாத்து இடப்பட்டிருக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அப்போதைய போலீஸ் மாஅதிபர் எர்னஸ்ட் பெரேரா சாட்சி வழங்கியுள்ளார்.

'இந்த வீடமைப்புத் திட்டத்தில் பொலீஸ் அதிகாரிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டமையானது, டக்ளஸ் பீரிஸ், அரச உர கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் மற்றும் குறித்த அமைச்சர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்' என அப்போதைய போலீஸ் மாஅதிபர், ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

குறித்த வீடமைப்புத் திட்டத்தில் யு 2-2 என்ற இலக்கத்தைக் கொண்ட வீட்டில் 1983ஆம் ஆண்டு மார்ச் 2ம் தேதி முதல் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ரணில் விக்ரமசிங்க வசித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்தக் காலப் பகுதியில் அவர் பதவி வகித்த இளைஞர் விவகாரம் மற்றும் தொழில் பாதுகாப்பு அமைச்சரின் சுற்றுலா விடுதியாகவும், கைத்தொழில் அமைச்சரின் அதிகாரபூர்வ வீடாகவும் ரணில் விக்ரமசிங்க அந்த வீட்டைப் பயன்படுத்தியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் நபர்களைத் தடுத்து வைத்து, அவர்களுக்கு சித்திரவதை வழங்கப்பட்டதாகக் கூறப்படும் வீடுகளின் இலக்கங்களையும் ஆணைக்குழு தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. இதன்படி, ஆணைக்குழுவின் ஆங்கில அறிக்கையின் பிரகாரம், 23 முதல் 26 வரையான இலக்கங்களைக் கொண்ட அறிக்கை பக்கங்களில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1989 முதல் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகம். இந்த வீட்டில்தான் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கிய டி.எம்.பந்துல என்ற நபர் சாட்சியம் வழங்கியுள்ளார். ஆணைக்குழுவினால் வீட்டுத் தொகுதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த நபரினால் இந்த வீடு அடையாளம் காட்டப்பட்டுள்ளது.



அத்துடன், ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ரணில் விக்ரமசிங்கவின் பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியான போலீஸ் பரிசோதகர் சுதத் சந்திரசேகர தங்கியுள்ளார். உதவி போலீஸ் அதிகாரியான டக்ளஸ் பீரிஸின் பாதுகாப்பு அதிகாரிகளும் தங்கியுள்ளனர்.

இந்த வீட்டில்தான் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டு, தான் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக சாட்சியமளித்த அர்ல் சுகி பெரேரா என்பவர் இந்த வீட்டை அடையாளம் காட்டியுள்ளார். சபுகஸ் கந்த போலீஸாரிடம் வீடொன்று கையளிக்கப்பட்டு இருந்ததும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில்தான் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக வாசல ஜயசேகர என்பவர் இந்த வீட்டை அடையாளம் கண்டு கொண்டுள்ளார்.

யு 1-8 என்ற இலக்கத்தைக் கொண்ட வீடு எவருக்கும் கையளிக்கப்படாத பின்னணியில், அந்த வீட்டை அண்மித்து போலீஸ் அதிகாரிகளின் நடமாட்டம் காணப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உர கூட்டுத் தாபனத்தின் தலைமை அதிகாரி பேலியகொடை போலீஸாரிடமும், ரணில் விக்ரமசிங்கவிடமும் அறிவித்துள்ளார். ஆனால், இந்த விடயம் தொடர்பில் எவரும் நடவடிக்கை எடுக்க வில்லை. ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகள் தங்கியிருந்த யு 1-7 என்ற வீட்டை அண்மித்து இந்த வீடு அமைந்துள்ளதுடன், அந்த வீடு பிரத்தியேக பாவனைக்காக வைக்கப்பட்டிருந்த இடம் என அஜித் ஜயசிங்க என்ற நபர் ஆணைக்குழுவிடம் சாட்சி வழங்கியுள்ளார்.

அப்போதைய கைத்தொழில் அமைச்சரான ரணில் விக்ரமசிங்க, இந்த ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியுள்ளார். அதன்படி, கொலை செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்ஜன் விஜேரத்னவின் கோரிக்கைக்கு அமையவே தான் முன்னெடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

எனினும், அது தொடர்பான எந்தவோர் ஆவணங்களையும் முன்வைக்கவில்லை என்பதுடன், அது தொடர்பில் அப்போதைய போலீஸ் மாஅதிபர் மற்றும் போலீஸ் திணைக்களம் இது தொடர்பில் அறிந்து இருக்காமையினால், ரணில் விக்ரமசிங்கவின் சாட்சியம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்படுகின்றது.

வழக்கறிஞரான விஜயதாஸ லியன்ன ஆராய்ச்சி என்பவர் 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி காணாமல் போயிருந்தார். அவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி வழக்கறிஞர் ரஞ்ஜித் அபேசூரிய, போலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

காணாமல் போன விஜயதாஸ லியன்ன ஆராய்ச்சி கைது செய்யப்பட்டுள்ளாரா என அப்போதைய பாதுகாப்பு செயலாளர், அப்போதைய போலீஸ் மாஅதிபரிடம் வினவியுள்ளார்.

போலீஸ் மாஅதிபர் இந்த விடயம் தொடர்பில் கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி போலீஸ் மாஅதிபரிடம் வினவியபோது, அவ்வாறு கைது செய்யப்படவில்லை என்று பதில் வழங்கப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் விஜயதாஸ, தங்காலை போலீஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அப்போதைய அரச பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராகக் கடமையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் புதல்வரான ரவி ஜெயவர்தன போலீஸ் மாஅதிபரிடம் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து, போலீஸ் மாஅதிபர் தங்காலை போலீஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட போலீஸ் அத்தியட்சர் கரவிட்ட தர்மதாஸவிடம் வினவியுள்ளதுடன், அவ்வாறான சம்பவமொன்று பதிவாகியுள்ளதை அதிகாரி மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆங்கில அறிக்கையின் 72வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் போலீஸ் மாஅதிபர் ஆர்னஸ்ட் பெரேராவின் சாட்சியத்தின் பிரகாரம், ரணில் விக்ரமசிங்க தன்னை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு சந்தேக நபரை (வழக்கறிஞர் விஜயதாஸ லியன்ன ஆராய்ச்சி) கொழும்புக்கு கொண்டு வந்து, 'களனி பிரிவில் செயற்படுகின்ற விசேட குழுவிடம்" ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தாம் நம்புவதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, போலீஸ் மாஅதிபரின் ஆலோசனைகளின் பிரகாரம், வழக்கறிஞர் விஜயதாஸ லியக்க ஆராய்ச்சி கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு, களனி பிரதேசத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட குற்றச் செயல் தடுப்புப் பிரிவின் போலீஸ் பரிசோதகர் குலரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி முற்பகல் 11 மணியளவில் கடும் காயங்களுடன் வழக்கறிஞர் லியன்ன ஆராய்ச்சி மீட்கப்பட்டு, கொழும்பு பெரிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவர் நள்ளிரவு உயிரிழந்துள்ளார்.

ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தப்பட்டமையே மரணத்திற்கான காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அவரின் உடலில் 207 இடங்களில் காயங்கள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

குறித்த வழக்கறிஞரை கொழும்பிற்குக் கொண்டு வரும்படி தான் போலீஸ் மாஅதிபருக்கு ஆலோசனை வழங்கவில்லை என ரணில் விக்ரமசிங்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

போலீஸ் மாஅதிபருக்கு ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியதாகக் கூறப்படும் சம்பவத்தை ரணில் விக்ரமசிங்க நிராகரித்த போதிலும், முன்னாள் போலீஸ் மாஅதிபர் அர்னஸ்ட் பெரேராவிடம் குறுக்குக் கேள்வி எழுப்புவதற்கு ரணில் விக்ரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முன்வரவில்லை என்பது விசேடமான விடயமாக இந்த ஆணைக்குழுவினால் கருத்தில் கொள்ளப்பட்டது.

கடந்த 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் தேதி முதல் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரையான காலப் பகுதியில் படலந்த வீடமைப்புத் திட்டத்தில் எவரேனும் ஒருவர் அல்லது நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு, அவர்கள் அமானுஷியமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பொறுப்பு கூற வேண்டியவர்கள் தொடர்பான தரவுகள் ஆணைக்குழுவின் ஆங்கில பிரதியின் 119 முதல் 122 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த 1986ஆம் ஆண்டு முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் அப்போதைய கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவினால் படலந்த வீடமைப்புத் திட்டத்தில் போலீஸ் அதிகாரிகளை நிறுத்துவதற்கு, அரச உர கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், அதனூடாக 13 வீடுகள் உதவி போலீஸ் அதிகாரி டக்ளஸ் பீரிஸிற்கு பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீடுகளை வழங்க ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்தமையானது, தனது அமைச்சுப் பதவியின் அதிகாரங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை எனக் கூறப்படுகின்றது.

இந்த வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு போலீஸ் திணைக்கள சரத்துகளுக்கு அமைய அது முறையற்றது என்பதுடன், அது குறித்து நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் சிரேஷ்ட போலீஸ் அதிகாரி நலீன் தெல்கொட பொறுப்பு கூறவேண்டும் என்பதுடன், அங்கு சட்டவிரோதமாக எதேனும் நடந்திருக்குமானால் அதை நிறுத்துவதற்காக அவர் நடவடிக்கை எடுக்காமை குறித்துப் பொறுப்பேற்க வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் படலந்த வீடமைப்புத் திட்டத்தில் வரவழைக்கப்பட்டிருந்த போலீஸ் அதிகாரிகளுக்குக் கூட்டம் நடத்தியமையும், அவரால் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க போலீஸாரின் செயற்பாடுகளுக்கும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கும் தலையீடு செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைய

(நாளையும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல்...

ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதல்களின் 5 ஆண்டுகள் நிறைவை குறிக்கிறது. பெரும்பாலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு பொறுப்பான ஒரு குறிப்பிடத்தக்க குழுவை அம்பலப்படுத்த முயற்சிக்கிறது.

இந்த ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு முன்னர், சம்பவத்துக்கு பொறுப்பான பலர் அம்பலப்படுத்தப்டுவார்கள் - நீதி நிலைநாட்டப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும். முன்னாள் அமைச்சர்கள் மூவர் இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தலை மறைவாகிவிட்டார். அவர் அப்படியே மறைந்தே இருக்கட்டும் பதற்றப்படத் தேவையில்லை - என்றார். (ஐ)

## பிரித்தானியாவின்...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்ட 4 பேருக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது. இதனை நாம் முதலில் வரவேற்கிறோம். ஆனால், விநோதம் என்னவென்றால் தென்னிலங்கையில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் உட்பட எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாக நின்று இவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார்கள்.

ஜே. வி. பி. அரசாங்கம் ஆரம்பத்தில் எமது இனப் பிரச்னை தொடர்பில் ஐ. நா. தீர்மானம் எடுக்கப்பட்ட உடனேயே அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவைக் கொடுக்கவில்லை. இப்போது 4 பேருக்கு தடை விதித்ததை வைத்துக்கொண்டு அமைச்சர் உட்பட அனைவரும் கூக்குரல் போடுவது இனவாதத்தின் அடிப்படையில் இந்த அரசாங்கம் செயல்படுவதை தெட்டத் தெளிவாகக் காட்டுக்கிறது.

சிங்கள தேசத்தில் ஒருவருக்கு பிரச்னை என்றால் ஆட்சியாளர்கள், கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது நாம் வரலாற்று ரீதியாக பார்க்கின்ற விடயம் - தற்போதும் பார்க்கிறோம். ஆனால், எங்களுக்குள் ஒற்றுமையீனத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எங்களின் போரராட்டங்களும் ஒருமித்த போராட்டமாக நடைபெறுவதில்லை. ஆகவே, தொடர்ந்தும், மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டோருக்கு ஐ. நா. சபைகூட அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று கூறுகின்ற நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஆதரிக்க வேண்டும்.

மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டவர்களுக்கு சர்வதேச நீதமன்றத்தின் மூலம் நீதி கிடைப்பதற்கு நாம் அதனை செயல்படுத்த வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தென்னிலங்கையில் உள்ளவர்கள் ஒற்றுமையாக இருந்து எம்மை அழிக்கின்ற செயல்பாட்டை முன்னெடுப்பார்கள்.

புதிய அரசாங்கம்கூட, போராட்ட இயக்கம் என்ற நிலையிலிருந்து மாறி இனவாத அரசாக பார்க்கக்கூடிய நிலையிலேயே உள்ளது. பிரித்தனியாவின் நிலைப்பாடு சர்வதேச நீதிமன்றம் வரை செல்ல வேண்டும். அதன் மூலம் நீதி கிடைக்க வேண்டும். எங்களுக்குள் இருக்கும் பகைமைகளை மறந்து எங்களுக்காக மரித்த மக்கள், போராளிகள் அனைவருக்குமாகவும், தமிழர் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த மயமாக்கல், நில அபகரிப்பு என்று தொடரும் அரச அடக்கு முறைகளுக்கு எதிராகவும் நாம் ஓரணியில் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# தடுப்பூசி போட்ட பின்னர் ஏற்பட்ட காய்ச்சலால் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

தடுப்பூசி போடப்பட்ட பின்னர் ஏற்பட்ட காய்ச்சலால் 3 மாத குழந்தை உயிரிழந்தது.

திருநெல்வேலி, கலாசாலை வீதியை சேர்ந்த மதீபன் மதுரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 26ஆம் திகதி, குழந்தைக்கு 2 மாதங்களில் போட வேண்டிய தடுப்பூசி போடப்பட்டது. மறுநாளான 27ஆம் திகதி குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டது. இதனால் குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## யாழ்ப்பாணம்...

விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு , 2. 25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 3.15 மணிக்கு புறப்பட்டு , திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்பு வோர், திருச்சி சென்று திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்கக்கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால் , கொழும்பு சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவை உள்நாட்டு போரால் தடைப்பட்டு 47 ஆண்டுகளுக்கு பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முரணான...

செயல்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின் போது அவ்வாறு ( மனித உரிமைகள், விதிகள் மீறல்) இடம்பெறும். இது தொடர்பில் உள்நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

சில நாடுகளால் விதிக்கப்படும் தடைகளால் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என நான் நினைக்கவில்லை. இதனால் நாட்டில் உள்ள இனவாதிகளுக்கே சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவது நல்ல விடயமாகும்.

அவர் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

திருகோணமலையில் சூரிய மின் திட்டம், வடக்கு ரயில் பாதைக்குரிய சமிக்ஞைகள் பொருத்தப்படுதல் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்காகவே அவர் வருகை தரவுள்ளார்.

மாகாண சபை முறைமை என்பது உள்நாட்டுப் பிரச்னையாகும். அதனை இந்தியா எமக்குக்கூற வேண்டிய அவசியம் கிடையாது.

மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என நாம் எமது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் பெரும்பாலும் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம். நாம் ஏற்கனவே மக்களுக்கு உறுதியளித்துள்ளோம்.

ஆகையால், அதனை இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை கிடையாது. நான் அறிந்த வரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# நீர் இணைப்பை பெறுவதற்கு இணையம் மூலம் விண்ணப்பம்!

கொழும்பு, மார்ச் 31

புதிய தண்ணீர் இணைப்புகளுக்கான நிகழ்நிலை விண்ணப்ப செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை இது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, புதிய நீர் இணைப்புகளுக்கான விண்ணப்பங்களை www.waterboard.lk வலைத்தளம் மூலம் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கோரிக்கை விடுக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் இணைப்புகள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த திட்டம் குறித்த நடவடிக்கை அடுத்த வாரத்துக்குள் நடைமுறைப்படுத்தப் படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 83 சதவீதமான இறப்புகளுக்கு தொற்றா நோய்களே காரணம்

சுகாதார அமைச்சர்

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் ஆண்டுதோறும் நிகழும் மொத்த இறப்புகளில் 83 வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன என்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் தரவுகளின்படி, 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 35 வீதமானோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

இவர்களில், உயர் இரத்த அழுத்தம் இருப்பதை அறியாமல் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 ஆயிரம் பேர் ஆண்டுதோறும் இறக்கின்றனர் அல்லது அங்கவீனம் டைகிறார்கள்.



மேலும், நாட்டின் வயது வந்தோரில் 20 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 41 வீதமானோர் சிகிச்சை பெறுவதில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# கொங்கிறீட் தூணுடன் ஓட்டோ மோதிய விபத்தில் பெண் பலி!

கொழும்பு, மார்ச் 31

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால் வீதியை விட்டு விலகிய ஓட்டோ கொங்கிறீட் தூணுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - கட்டுகெலியாவை பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், உபுல்தெனிய பகுதியை சேர்ந்த 43 வயதான பெண்ணே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி, ஒரு பெண் மற்றும் பின்புற இருக்கையில் பயணித்த இரண்டு ஆண்கள் அனுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், பெண் உயிரிழந்தார். (ஐ)

## முத்திரை...

வருகிறது.

ஏதேனும் ஒரு சொத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கும்போது நீண்டகால குத்தகை ஒப்பந்தம் அல்லது வாடகை ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு உரிய முழுமையான காலப்பகுதிக்காக முதல் கட்டணம் உள்ளடங்கலாக குத்தகை அல்லது வாடகையானது ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக 10 ரூபாய் முத்திரை கட்டணம் அறவிடப்பட்டு வந்தது. இந்தக் கட்டணம் நாளை முதல் 20 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பிரசுரித்துள்ளார்.

2006ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் தடவையாக முத்திரை வரி கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நுகர்வோர் கடன் சட்டத்தின் பிரகாரம் உறுதியளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய முழு பெறுமானத்தில் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் அல்லது அதன் ஒருபகுதிக்காக அறவிடப்படும் முத்திரை கட்டணம் திருத்தம் செய்யப் படவில்லை. இதற்கமைய 10 ரூபாயாக உள்ள குறித்த முத்திரை கட்டணம் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## மிகக்குறைந்த...

பிரிந்து போட்டியிட வேண்டும். எவ்வாறு போட்டியிட்டாலும் இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைக்கும்.

தேசிய மக்கள் சக்தி இந்த நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டு வருவதுடன், எதிர்காலத்தில் முழுமையாக நாட்டை நாம் மீட்டெடுப்போம். இந்தியப் பிரதமரின் வருகையையடுத்து இலங்கைக்கு பெருந்தொகை கிடைக்கப் பெறும்.

தனியார் நிறுவனம், காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்யவுள்ளது. குறைந்த விலையில் மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தில் நாம் அண்மையில் கையெழுத்திட்டோம்.

தெற்காசிய பிராந்தியத்தில் இன்னும் 3 அல்லது 4 வருடங்களில் குறைந்த மின்சார கட்டணத்தை கொண்ட நாடாக இலங்கை மாறும் என்று உறுதியளிக்கிறேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணி ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 31


உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று அரச அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்குள் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் என்று அச்சக பணிப்பாளர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார

மேலும், உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான அதிகாரபூர்வ தேர்தல் அறிவிப்புகள் மற்றும் வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. வாக்குச் சீட்டுகளை அச்சிடுவது தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அச்சகத்துக்கு இப்போது தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக கடந்த நாளில் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் வன்முறைச் செயல்கள் தொடர்பாக 7 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யாழ். மத்திய பேருந்து நிலையத்தை அழகுபடுத்தும் நடவடிக்கை ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மார்ச் 31

தூய இலங்கை வேலைத்திட்டம் மூலம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை அழகுபடுத்தும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான கருணைநாதன் இளங்குமரன் கலந்துகொண்டிருந்தார்.

வேலைத் திட்டத்தில் இராணுவத்தினர், பொலிஸார், இலங்கை போக்குவரத்து சபையினர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, "இனிவரும் காலத்தில் பேருந்து நிலையத்தில் விளம்பரங்களை ஒட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்", என்றும் இளங்குமரன் எம். பி. தெரிவித்தார். (ஐ)

## சாமர சம்பத் எம். பிக்கும் வீட்டு உணவே வேண்டுமாம்!

கொழும்பு, மார்ச் 31

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகளிடம் வெளியில் இருந்து உணவு கொண்டு வர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் வசதிகள் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன்படி, எம். பிக்கு ஒரு பாய், தலையணை, தட்டு மற்றும் கோப்பை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கண்டி தும்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வீட்டிலிருந்து உணவு கொண்டு வர சிறைச்சாலை அதிகாரிகள் சமீபத்தில் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த நிலையிலேயே சாமர சம்பத் எம். பியும் தனக்கு வெளியில் இருந்து உணவு கொண்டு வர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை:

# அதிகார மட்டத்திலான கலந்துரையாடல் விரைவில்!

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், மார்ச் 31

**இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையிலான அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**



இராமேஸ்வரத்தின் அனைத்து விசைப்படகு சங்க செயலாளர் சகாயம் தலைமையிலான இந்திய மீனவர் பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் பணிமனையில் அமைச்சரை சந்தித்துப் பேசினர். இது தொடர்பில் அமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை இந்திய மீனவர்கள் உணர்ந்தனர் என்பதை அறிய முடிந்தது.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கும் இது தொடர்பில் அடுத்தக்கட்ட பேச்சுகளை முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் எதிர்வரும் நாட்களில் நடைபெறும் - என்றுள்ளது. (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் தடைகள் விதிக்கப்பட வேண்டும்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

வவுனியா, மார்ச் 31

போர் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதை நாம் வரவேற்கிறோம். அத்துடன், சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறான தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்திலேயே அவர்கள் இந்த விடயத்தைத் தெரிவித்தனர்.

மேலும், இலங்கை அரசானது நீண்டகாலமாக பொறுப்புக்கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேசத்திடம் நீதி கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம். போர் குற்றச்சாட்டுக்குள்ளான சில இராணுவ தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுள்ளார்கள் என்பதை உணரமுடியும்.

இவ்வாறு தடை விதிக்கப்பட வேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்கவேண்டும்.

சர்வதேச நாடுகளும் பயணத் தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியை பெற்றுத்தரவேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு - என்றும் கூறினர். (ஐ)

# எருமை மாடுகளுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 31

எருமை மாடுகளுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - மூன்றுமுறிப்பு - அறுகம் குளம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், நட்டாங்கண்டல் பகுதியை சேர்ந்த 52 வயது நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர், கடந்த 27ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வுக்கு சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அறுகம் குளம் பகுதியில் எருமை மாடுகளுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது. இதில், படுகாயமடைந்த அவர் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டார்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 31

வலிந்து காணாமல் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தங்களின் சங்கத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாத இறுதியிலும் வலிந்து காணாமல் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டக்காரர்கள் சர்வதேச நீதியை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org